# அத்வைத விசாரணை!

## கேள்வி : பதில் – (பகுதி.02)



**ப்ரக்ஞன்**

# அத்வைத விசாரணை

## கேள்வி & பதில்

(பகுதி – 02)

## ப்ரக்ஞன்

# அத்வைத விசாரணை

## கேள்வி & பதில் பகுதி.02

**ப்ரக்ஞன்**

அத்வைத வேதாந்தத்தின் அடிப்படை முதல், ஆழமான தத்துவம் வரை விளக்கும் விரிவான விசாரணை.

1. **அத்வைதம் என்றால் என்ன?**

அத்வைதம் என்றால் இரண்டற்ற உண்மை. இந்த பிரபஞ்சத்தில் இறுதி உண்மை ஒன்று மட்டுமே.

<u>உபநிஷத் கூறுவது:</u> एकमेवाद्वितीयम् - ஏகம் ஏவ அத்விதீயம்

ஒன்றே ஒன்று – இரண்டில்லை.

2. **பிரம்மம் என்றால் என்ன?**

பிரம்மம் எல்லையற்றது. நித்தியம் – சைதன்யம் – இருப்பு.

<u>உபநிஷத் கூறுவது</u>: सत्यं ज्ञानम् अनन्तम् ब्रह्म - ஸத்யம் ஞானம் அனந்தம் ப்ரஹ்ம

3. **ஆத்மா என்றால் என்ன?**

ஆத்மா – உண்மையான நான் – சாட்சி சைதன்யம்.

4. **ஆத்மா எங்கே இருக்கிறது?**

இந்த கேள்வியே தவறானது. ஏனெனில், ஆத்மா மட்டுமே இருக்கிறது. அதுவே, "ஸத்". அது ஒரு இடத்தில் இல்லை. காலத்தில் இல்லை. அது, உண்மையில் உணர்வில் உள்ளது. அதுவே, எல்லாவற்றிற்கும் ஆதாரம்.

**<u>உபநிஷத் ஆதாரம்:</u>** अनन्तं ब्रह्म அனந்தம் ப்ரஹ்ம / प्रज्ञानं ब्रह्म - **ப்ரஜ்ஞானம் ப்ரஹ்ம**

5. **ஆத்மா அனுபவிக்கப்படுமா?**

ஆத்மா என்பது, அனுபவிக்கப்படும் ஒரு பொருள் அல்ல. அதை அனுபவிக்க அதற்கு வேறாக இன்னொன்று இல்லை. அது, அனுபவத்தை வெளிச்சப்படுத்தும் உண்மை.

6. **ஆத்மா மற்றும் பிரம்மம் வேறுபட்டதா?**

வேறுபாடுகள் இல்லை. இரண்டும் ஒன்றே. பெயர் மட்டுமே வேறு, வேறு.

மஹாவாக்கியம்: तत् त्वम् असि - தத் த்வம் அசி ("அது நீ தான்.").

7. **ஆத்மா மற்றும் சைதன்யம் வேறுபட்டதா?**

இல்லை.

வேதாந்தம் தெளிவாகச் சொல்கிறது. ஆத்மா = சைதன்யம்

இரண்டும் ஒன்றே. அது, உடலில் இல்லை. மனத்தில் இல்லை. அந்த சைதன்யம் என்பது, தன்னுடைய சுய அறிவில் அனைத்தையும் வெளிச்சப்படுத்திக் காட்டுகிறது.

<u>மஹாவாக்கியம்:</u>

प्रज्ञानं ब्रह्म - **ப்ரஜ்ஞானம் ப்ரஹ்ம**

8. **உலகம் உண்மையா?**

வேதாந்தம் கூறும்போது, ஜகன்மித்யா. இந்த உலகம் சுய அறிவில் தோன்றுகிறது. ஆனால், அது சுய உண்மை இல்லை.

9. **ஜீவன் என்றால் என்ன?**

**ஜீவன்** = ஆத்மா + அஹங்காரம் என இரண்டும் சேர்ந்தது. அஹங்காரம் அவைத்தையால் வந்தது. அவித்தை காரணமாக ஜீவன் என்று அழைக்கப்படுகிறது.

10. **ஜீவன் உண்மையா?**

ஜீவன் என்பவன் மித்யா. ஏனெனில், **ஜீவன்** = ஆத்மா + அஹங்காரம்

இந்த அஹங்காரம் நீங்கினால், ஆத்மா மட்டும் இருக்கும்.

11. **ஈஸ்வரன் அத்வைதத்தில் என்ன நிலை?**

அத்வைதத்தில், பிரம்மம் + மாயை = **ஈஸ்வரன்**

அதாவது, ஈஸ்வரன் – உலகத்தை நடத்தும் காரணம். மாயையின் அதிபதி.

12. **முக்தி எப்போது கிடைக்கும்?**

முக்தி என்பது, ஏதோ அடையக்கூடிய ஒரு புதிய நிலை அல்ல. அது, அறியாமை நீங்கிய அறிவின் தெளிவு.

**13. ஜீவன்முக்தி என்றால் என்ன?**

இந்த பரு உடல் இருக்கும்போதே, பந்தம் இல்லை. அஹங்காரம் இல்லை.

இந்த நிலைக்கு பெயர் ஜீவன்முக்தி.

**14. முக்தி என்றால் என்ன?**

**"நான் பிரம்மம்"** என்ற தெளிவு.

**15. அஹங்காரம் என்றால் என்ன?**

**"நான் உடல்"** என்ற தவறான அடையாளம்.

**16. அஹங்காரம் எப்படி உருவாகிறது?**

சைதன்ய பிரதிபிம்பம் + மனம் = **அஹங்காரம்.**

**உதாரணம்:** சூரியன் + கண்ணாடி = **ஒளி பிரதிபலிப்பு**

அதுப்போல, சைதன்யம் + மனம் = **"நான்"** எண்ணம்.

**17. மாயை என்றால் என்ன?**

மாயை – உண்மையை மறைத்து, தவறான உலகத்தை காட்டும் சக்தி. அதாவது, இல்லாததை இருப்பதுப் போல காட்டுவதே மாயா.

### 18. மாயையின் இரண்டு சக்திகள் என்ன?

மாயையிடம் இரண்டு சக்திகள் உள்ளன. அவைகள், தோன்றும் சக்தி, மறைக்கும் சக்தி. இதில் மறைக்கும் சக்திக்கு 'ஆவரண சக்தி' என்றும், தோன்றும் சக்திக்கு 'விக்ஷேப சக்தி' என்றும் பெயர்.

### 19. "சாட்சி" என்றால் உண்மையில் என்ன?

வேதாந்தத்தில் **"சாட்சி"** என்பது, பார்க்கும் கண்கள் அல்ல, எண்ணங்களை எழுப்பி, அதைப்பற்றி நினைக்கும் மனம் அல்ல. அது, அனைத்து அனுபவங்களையும் வெளிச்சப்படுத்தும் ஆத்ம சைதன்யம் எனலாம்.

**உதாரணம்:** விழிப்பு, கனவு மற்றும் ஆழ்ந்த உறக்கம் ஆகிய இந்த மூன்று அவஸ்தைகளையும் அறிந்துக் கொண்டிருக்கும் சாக்ஷி சைதன்யம் ஆகும்.

சாட்சி என்றால், என்ன என்பதை உபநிஷத் கூறும்போது, த்ரஷ்டா, ஸ்ரோதா, மந்தா, விஜ்ஞாதா என்று பார்க்கின்றோம். இவைகள், மனிதனின் அனுபவங்களில் இருக்கும் அறிவின் நான்கு வெளிப்பாடுகளை குறிக்கின்றன. இந்த சொற்கள் பெரும்பாலும் பிருஹதாரண்யக உபநிஷத் மற்றும் வேதாந்த விளக்கங்களில் பயன்படுத்தப்படுகின்றன.

1. **த்ரஷ்டா** (द्रष्टा)

த்ரஷ்டா என்றால், பார்ப்பவன். இங்கு, கண்கள் பார்ப்பதில்லை. கண்கள் ஒரு கருவி. உண்மையில், பார்ப்பது – சைதன்யம்.

உதாரணம்: கண் ஒரு கேமரா போல. ஆனால், படங்களை உணர்கிறது அறிவு (சாட்சி) மாத்திரமே. அதனால், ஆத்மா = த்ரஷ்டா.

2. **ஸ்ரோதா** (श्रोता)

ஸ்ரோதா என்றால், கேட்பவன். காது ஒலி பெறும் கருவி. ஆனால், ஒலியை அறியும் அறிவு – ஆத்மா.

3. **மந்தா (मन्ता)**

மந்தா என்றால், சிந்திப்பவன். சிந்திப்பது மனம். ஆனால், மனத்தை வெளிச்சப் படுத்துவது சாட்சி சைதன்யம் ஆகும். அதனால், ஆத்மா இல்லாமல், மனம் சிந்திக்க முடியாது.

### 4. விஜ்ஞாதா (विज्ञाता)

விஜ்ஞாதா என்றால், அறிபவன். எந்த அறிவும் நிகழ்வதற்கு, பொருள், மனம், சாட்சி தேவை. அதில், இறுதி அறிபவன் ஆத்மா.

இவைகள் அனைத்தும் யாரை குறிக்கின்றன?

இந்த நான்கு சொற்களும், சாட்சி சைதன்யத்தை குறிக்கின்றன. அதாவது, பார்க்கும் அறிவு, கேட்கும் அறிவு, சிந்திக்கும் அறிவு, அறியும் அறிவு இவைகள் அனைத்தும் ஆத்மாவே.

## 20."நான்" உணர்வு எங்கே இருக்கிறது?

**"நான்"** எனும் உணர்வு முதலில் தோன்றுவது, சைதன்யத்தில் மட்டுமே. ஆனால், மனம் அதை தனதாக்கிக் கொண்டு, உடலைப் பிடிக்கிறது. அதன் காரணமாக, இந்த உடலை 'நான்' என்று அபிமானம் கொள்கின்றது. அதுவே, **'அஹங்காரம்'** எனப்படுகிறது.

## 21. மாயை மற்றும் அவித்யை இரண்டும் ஒன்றா?

இல்லை. காரணம், ஒரு நுண்ணிய வேறுபாடு உள்ளது.

மாயை = **ஈஸ்வரன்**

அவித்யை = **ஜீவன்.**

| **மாயை** | **அவித்யை** |
|---|---|
| ஈஸ்வர சக்தி | ஜீவ அறியாமை |
| சமஷ்டி | வ்யஷ்டி |

## 22.பிரம்மம் ஏன் உலகமாகத் தோன்றுகிறது?

உண்மையில் பிரம்மம் உலகமாகத் தோன்றவில்லை. அது, மனம் என்னும் ஊடகம் உண்டாக்கும் மாயையின் தோற்றம்.

**உதாரணம்:** நிலத்தில் கானல் நீர் அல்லது கயிற்றின் மீது பாம்பு.

**23.சஹஜ சமாதி என்றால்?**

சஹஜ சமாதி என்பது, ஒரு தியான நிலை அல்ல. முயற்சி இல்லாத அமைதி. அதுவே, எல்லாவற்றிலும் சகஜமாக இருக்கும் ஞானியின் இயல்பு.

**24.அத்வைதத்தின் மிகச் சுருக்கமான வாக்கியம்**

सर्वं खल्विदं ब्रह्म - சர்வம் கஹ்ல்விதம் ப்ரஹ்ம – எல்லாம் பிரம்மம்.

**25.இறுதி அத்வைத உண்மை என்ன?**

அத்வைதம் சொல்லும் இறுதி உண்மை, நான் ஒருபோதும் பிறக்கவில்லை. நான் ஒருபோதும் பந்தத்தில் இல்லை. இந்த உலகம் என்பது படைக்கப்படவே இல்லை.

இந்த படைப்பையும், தோற்றத்தையும் நம்பவைக்கின்ற மாயா சக்திக்கு அடித்தளமாக இருக்கும் நான் – **சுத்த சைதன்யம்.**

# அத்வைத விசாரணை!

கேள்வி : பதில் – (பகுதி.02)



ப்ரக்ஞன்